# சங்ககால சமூகத்தில் தாய்மையின் வெளிப்பாடு

***வீ. கீதா***
அ. வீரையாவாண்டையார் நினைவு திரு
புட்பம் கல்லூரி, (தன்னாட்சி) பூண்டி - தஞ்சாவூர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7736

***ஆய்வுச்சுருக்கம்***

*மனித வாழ்வியல் நிகழ்வுகளையும், அனுபவங்களையும் இணைத்துப் பாடப்பட்ட நூல்கள் தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் ஆகும். இவ்விலக்கியங்கள். வீரமும், காதலும். நட்பும், பக்தியும், கொடை, விருந்தோம்பல் போன்றவற்றை அடையாளப் படுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் ஒவ்வொரு பாத்திரப்படைப்பும் சமூகச்சூழலை ஒத்து பிரதிபலிக்கக்கூடிய படைப்புகளாக வரையறுக்கப்பட்டுள்ளதை நாம் அடையாளம் காணலாம். இவற்றில் தாய் வழிச்சமூகம் பெற்ற மகள் மீது எவ்விதமான உணர்வுகளை வெளிப்படுத்துகிறது என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## முன்னுரை

சங்க இலக்கியம் அகவுணர்வையும், வீரவுணர்வையும் மையப்படுத்தி எழுதிய இலக்கியமாகும். மனித வாழ்விற்கும் வீரமும், பொருளும் தேவை என்றாலும் அகவுணர்வு இல்லையென்றால் இல்வாழ்க்கையில் முழுமைத்தன்மை அடைய முடியாது. உயிர்கள் தோற்று வித்தல் பண்பிற்கு அகவாழ்வு மிக அவசியமாக கருதப்படுகிறது. அகவாழ்வு மனமகிழ்விற்கும், இனவிருத்திக்கும் அடிப்படைக் கோட்பாடாக அமைகிறது. பண்புகளில் அன்பு செய்தல் என்பது மிக உயரியப் பண்பாகக் கருதப்படுகிறது. அன்பு வயப்பட்ட தலைவி நிலைக்கண்டு தாய் எவ்விதமான உணர்வுகளை வெளிப்படுத்தி அவள் வாழ்வை செம்மையுறச் செய்கிறாள் என்பதைக் காணலாம்.

## தாய் என்பதன் விளக்கம்

தாய் என்பதற்கு அகராதிகள் பல்வேறு விளக்கங்களை தருகின்றன. அன்னை, ஐவகைத் தாயருள் ஒருத்தி, தாயாகக் கருதப்படும் அரசன் தேவி, குருவின் தேவி, அண்ணன் தேவி, மகள் கொடுத்தவளும் இவர்களுள் ஒருத்தி,

1. அன்னை - தாய், தாய் போல், மதிக்கப்படுபவள், வியப்பு, இரக்கக்குறிப்பு
2. ஐவகைத் தாயர் - ஈன்றதாய்- ஈன்றவள், தாய்
3. ஊட்டும் தாய் - ஊட்டும் தாய் என்பவள் ஐவகைத்தாயருள் ஒருத்தி, சோறு ஊட்டு பவள்

4. முலைத்தாய் - ஐவகைத் தாயருள் குழந்தைக்கு பால் கொடுப்பவள்
5. கைத்தாய் - வளர்ப்புத்தாய்
6. செவிலித்தாய் - வளர்புத்தாய்

என்று பல்வேறு வகையான விளக்கங்களைத் தருகிறது.

அம்மா இயற்கையாகவே தோன்றிய சொல்லாகும். அம்ம, அம்மு, அம்மை போன்ற சொற்கள் அம்மா என்ற சொல்லுக்குப் பிறகுத் தோன்றியவை. தாய் என்ற சொல் B என்ற சொல்லின் நீட்சியாகும். கிராமங்களில் அம்மா எனும் சொல்லை ஆத்தா எனவும் குறிப்பிடுவார். ஆய், தாய், அன்னை, அம்மை ஆகியவையாவும் பிற்காலச் சொற்களே. அம்மா + ஆச்சி = அம்மாச்சி, அம்மா என்ற தமிழ்ச் சொல் மாமா, மாதா, மதத்ரு என்றவாறு வடமொழியில் திரிந்தது எனலாம். மேற்கண்ட சொற்களை அம்மா என்ற சொல்லுக்கு விளக்கமாக கருதலாம்[1]

இத்தகைய சிறப்பு வாய்ந்ததாய் தன் பெற்ற மகளின் வாழ்வினை செம்மையிடும் விதத்தினை பின்வரும் விளக்கத்தின் வழி அறியலாம்.

**ஈன்ற தாயின் கடமைவுணர்வு**

ஐவகைத் தாயருள் ஈன்ற, தாய் தன் குழந்தைகளுக்கு எந்தச் சூழலிலும் துன்பம் நேர்ந்து விடக்கூடாது என்ற பாதுகாப்பு உணர்வினை அளிப்பவளாக விளங்குகிறாள். இவற்றை வள்ளுவர், தம் பொருள் என்ப தம் மக்கள் அவர் பொருள் தம் தம் வினையான் வரும் 2 - (குறள் - 63) ப. 22 - ப.63

பெற்றோர் தாம் பெற்ற பிள்ளைகளை மக்கட் செல்வம் என்பர். அவரவர் வாழ்நாளில் செய்த நல்வினை தீவினைகளால் அப்பிள்ளைகளின் புகழும் அமையும். என்பதனை மேற்கண்ட குறளின் வாயிலாக அறிய முடிகிறது.

**தாய் தன் மகளின் உணர்வை அறிதல்**

தாய் தன் மகள்களவொழுக்கத்தில் ஈடுபட்டுள்ளாள் என்று அறிந்தும் அறியாதவர் போல தலைவியின் உணர்வுக்கு மதிப்பளித்து செயல்படுவாள். தலைவியின் செயலை புறங்கூறும் வகையில் பெண்கள் செயல்பட்டாலும் தன்மகளின் மாறுபட்ட நடவடிக்கைகளை தாயே முதலில் கண்டுக் கொள்கிறாள். மகள் மகிழ்ந்தாலும், மாறுபட்டுச் சினத்தாலும், தாயே தன் மகள் ஒழுக்கத்தை அறிந்து உணர்ந்து கொள்வாள்.

**இன்னன் இனையள் நின்மகள் என, பலநாள்**
**எனக்கு வந்து உரைப்பவும், தனக்கு**
**உரைப்பு அறியேன்[3]**

**-அகம், பாலை; பா-203**

தாய் அறிந்து கொண்ட செய்தி இப்பாடல் வரி புலப்படுகிறது.

**மனை நீங்கிய மகள்**

தாய்க்கு தன்களவொழுக்கம் நிகழ்ச்சி தெரிந்தால் தன் தலைவனுடன் வாழ்வது இடையூறாகும் என்று எண்ணிதாயக்கு தெரிந்தால் தன் இல்லம் விட்டு நீங்க முற்படுகிறாள் தலைவி,

**யான் இவ்வறுமனே ஒழிய, தானே**
**அன்னை அறியன், இவண் உறை வாழ்க்கை**
**எனக்கு எளிது ஆகல் இல் [4]**

**(அக:ப-13 பா-203)**

என்னும் கூற்றால் தலைவி தலைவனுடன், மிக நீண்ட கடினமான வழி கடந்து செல்கிறாள். பொலி வற்ற இம்மனையில் தனித்துக்கிடக்கு மாறு கழல் அணிந்த காலினையும், மின்னல் போல ஒளிவிடுகின்ற நீண்ட வேலினையும் உடைய இளையோனாகிய தன் தலைவன் முன்னே செல்ல, பல மலைகளையுடைய கடத்தற்கரிய சுர வழியைக் கடந்து சென்றாள்.

**நற்றாய் புலம்பல்**

இது குறித்து தொல்காப்பியரும் விளக்கியுள்ளார்,

***தன்னும் அவனும் அவனும் கட்டி***
***அன்னையும் அறத்தொடு தொகை(C)***
**தோழி தோத்துக்கண்டோர் பாங்கனும்**
**போகிய திரத்து நற்றாய் புலம்பலும்[5]**
***- (தொல்; அகம்;38;1-2)***

ஆகிய கிளவியும், அவ்வழி புரியும் அகத் திணையியலில் தலைவன், தலைவி உடன் போகிய நிலை நற்றாயின் புலம்பலும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. கடுமையான சுரத்தினை தலைவி கடந்துச் சென்றுள்ள நிலையை அறிய முடிகிறது.

**செவிலித்தாய் புலம்பல்**

மகள் வருந்தக்கூடாது என்று எண்ணியது போலவே செவிலித்தாய் ஒருத்தி தான் வளர்த்த பெண்ணை எண்ணி வீட்டில் நைந்து பல நாள் வேண்டியும் பாலை உண்ணாதவள், பாலை வழி கிணற்றில் உவர் நீரை தலைவன் முகந்துதர அதனை குடித்தனம் போலும் என்று தன்னுள் வருந்திக் கூறுகிறாள். அது குறித்து கீழ்கண்ட பாடல் விளக்குகிறது.

***தெண் கண் உவரிக்குறைக் குடமுகலை***
***அறனிலாலின் தோண்ட, வெய்து உயர்த்து.***
***வெறுத்த உள்ளமொடு உண்ணாதோரே[6]***
***- (அகம், ப: 187பா.207)***

இங்கே, நல்லபாலில் தேனைக் கலந்து தருவேன். கூந்தலைத் தடவி விட்டுக் கொண்டு கெஞ்சுவேன். உண்ணமாட்டேன் என்று மறுப்பாள் என்று மேற்கண்ட பாடல் வாயிலாக செவிலித்தாய் புலம் புலம் செய்தி வெளிப்படுகிறது.

உடன் போக்கில் ஈடுபட்ட மகளை நினைத்து வருந்தும் தாய் காதல் உணர்வு அகப்பட்ட பெண்ணை அயலர்கள் அலர்தூற்றுவர். அவர்கள் வாயில் தீவைத்து உன் மகள் இப்படி என்று பல நாள் அவள் தாயிடமே சொல்வார்கள். மகளிடம் சொன்னாள் வருத்தப்படுவாள் என்று தாய் மறைத்து வைத்திருக்கிறாள். அந்த செல்ல மகள் உடன் போக்கில் ஈடுபட்டதால் மகள் இல்லாத வெறும் மனையில் வாழும் வாழ்வை தாய் எதிர்க் கொள்கிறாள். தாய்க்கு தெரிந்தால் இணக்கமாக வீட்டில் வாழ முடியாது என்று எண்ணி வீரக் கழல் அணிந்த காலும், வேல் அணிந்தகையும் இளையோன் பின் நோக்கி வர முன்னே நடந்து பல மலையடுக்குகளை கடந்துச் சென்று விட்டாள்.

நான் அவள் தாய் (அன்னேன்) அல்ல என்பது போல் சென்று விட்டாள். மான் வழி தடுமாறும் மலைவழியில் வெறுப்படையாமல் சென்றுவிட்டாள். விருந்தினரை வழியனுப்பி வைப்பது போல் அவர்களை அனுப்பிவிட்டு ஊரின் ஒரு மூலையில், (துச்சில் - ஒதுக்கிடம்) கிடக்கிறேன். நொச்சி பூக்கும் மலையையும் பெண்ணாகக்கிடப் பேனாகுக என்பதை பின்வரும் பாடலில்,

**‘உவக்குநள் ஆயினும் உடலுநள் ஆயினும்,**
**யாய் அறிந்து உணர்க என்னார், தீ வாய்**
**பன்மலை அருஞ்சுரம் போகிய தனக்கு, யான்”[7]**
***(அகம், ப-178 , ப.203)***

**மகளுக்கு விருந்து செய்ததாய்**

மகள் மனைவிட்டு நீங்கப் போகிறாள் என்று செல்ல இருந்த கடினமாக வழித்தடங்களில் அவர்களுக்கு முன்பே தாய் செல்கிறாள். அவ்வாறு சென்று என் மகளுக்கு யான் அத்தகையவள் அல்லள் என்ற உண்மை தோன்று மாறு, விலங்குகள் செல்லும் வழிகளில் பின்னிக்கிடக்கும் மலையின் அடிப்பகுதியில் அமைந்த சிறு வழியில் இடையே இடையூறுகள் ஏற்படாதவாறு அவர்கள் செல்வதற்கு முன்னரே சென்று சேர்ந்து பொலி வில்லாது தனித்து இருக்கும் பெரிய மலையைச்சார்ந்த சிற்றூரில் தன் கண் வரும் விருந்தினராக அவர்களை ஏற்று விருந்தைச் செய்து குடியிருப்பில் அவர்களைத் தங்கச் செய்ய அவர் தம் மனைகுல பெண்ணாகயான் ஆவேன் என்று சுட்டப்பட்டுள்ளது.

### தாயின் மேன்மைக் குணம்

தாய் தன் பெற்ற மக்கள் தன்மனை வீட்டு நீங்கி வேறு மனைக்கு சென்று துன்பப்படக்கூடாது என்று கருதியதாய் அந்தமனையில் தாங்கி, அவர்களுக்கு விருந்து உபசரித்தக்குணம் மேன்மை மிக்க குணமாக கருதப்படுகிறது. மேலும் தன் மகளுக்கு அவளின் அக உணர்விற்கும் எந்த விதத்திலும் இடையூறு செய்யும் தாயாக அவளை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. தெண் கண் உவரிக் குறைக்குட, முகலை.

**வெறுத்த உள்ளமொடு உண்ணாதோரே**[8]

**- (அகம்ப: 87 பா.207)**

என்ற பாடலில் மகள் வருந்தக்கூடாது என்று எண்ணியதுப் போலவே செவிலித்தாய் ஒருத்தி தான் வளர்த்த பெண்ணை எண்ணி, வீட்டில் நயந்து பலகால் வேண்டியும் பாலை உண்ணாதவள், பாலை வழி கிணற்றில் ஊறிய உலர் நீரைத் தலைவன் முகந்துதர அதனைக் குடித்தனன் போலும் என்று தன்னுள் வருந்திக் கொள்கிறாள்.

### சமூக வாழ்வு சிறக்கத் தாய் அன்பு அவசியம்

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சமூகப் பொறுப்புணர்வு உண்டு. அன்பு என்னும் ஆய்தம் ஆற்றல் வாய்ந்த ஒரு கருவி. அது சமூகச் சூழலை ஒழுங்குப்படுத்தவும், தனி மனிதன் சிந்தனையை நெறிப்படுத்தவும் உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அது தாயின் வடிவத்தில் உலகியலுக்கு அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

### முடிவுரை

இலக்கியங்கள் உறவுகளில் உள்ள உன்னதங்களை எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடியாக விளங்கும். ஆண்களின் வீர உணர்வு குறித்தும், பெண்களின் அக உணர்வு, குறித்தும் சமூகச் சூழலுக்கு ஏற்றாற் போல் எடுத்துச் சொல்லும் போது மிகப்பெரிய நெறி பிறழா சமூகத்தை நாம் அடையாளப் படுத்தமுடியும்.

### அடிக் குறிப்புகள்

1. மு. சண்முகம்பிள்ளை, தமிழ் - தமிழ் அகராதி, பக். 1, 68, 218, 183, 897, 376, 508 ஆண்டு- சூன். 1985 Whattps://ta.m.wikipedia.oog,vikl
2. ப. பகலவன் உரை, திருக்குறள் - ப.22, பா.63, ஆண்டு - 2007
3. பாவலேரேறு ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டி கையுரை ப. 72, (பா.38-1-2)
4. மேலது, ப. 38 (பா.16)
5. ப. பகலவன், திருக்குறள், பக். 18 - 45
6. பாவலேரேறு ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டி கையுரை ப. 38, பா.16
7. பொன்னுசாமி வேலுத் தேவர் சோம சுந்தரனார், குறுந்தொகை, ப. 7- பா. 3 ஆண்டு - 1909 - 1972
8. மேலது, ப-60, பா-40
9. புலியூர் கேசிகன், அகநானூறு, மணிமிடைபவளம், ப-178, பா-203, ஆண்டு - ஜுன் 2010
10. மேலது, ப-178, பா-203 ஜுன் - 2010
11. மேலது, ப.178, பா-203, ஜுன் 2010
12. மதுரை தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம் நற்றிணை ப. 14, பா. 34 14-15 1998 - 2008
13. பாவலரேறு ச. பாலசுந்தரம், தொல்காப்பியம், ஆராய்ச்சிக் காண்டி கையுரை
14. பாவலரேறு ச. பாலசுந்தரம், தொல்காப்பியம், ப. 608, பா. 203
15. மேலது, ப.72, பா.38